சிறப்புக்குறிப்பு 6

## நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவுத் தொழில்முயற்சிகளுக்கான வங்கிக் கொடுகடன்

### அறிமுகம்

பிரதேசங்களுக்கிடையிலான பொருளாதாரச் செயலாற்றல் சமமின்மைகளை குறைப்பதன் மூலம் உள்ளடங்கலான வளர்ச்சியினை மேம்படுத்துவது, அவர்களுடைய நடைமுறைக்காலத்தில் பின்னைய காலங்களில் பெரும் நிறுவனங்களாக அபிவிருத்தியடைந்து குடித்தொகையின் கணிசமானோருக்கு தொழில்வாய்ப்புக்களை வழங்கி நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் பங்களிக்கும் உள்ளாற்றல் கொண்டிருப்பதனால் பொருளாதாரத்தின் அபிவிருத்தியில் ஓர் பாரிய வகிபாகத்தை நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவுத் தொழில்முயற்சிகள் கொண்டிருக்கின்றன என்று பரவலாக ஓப்புக்கொள்ளப்படுகிறது. உலகளாவிய ரீதியில் வேலைவாய்ப்பில் 70 சதவீதத்திற்கு வகைகூறியதுடன் ஏராளமான நாடுகளிலுள்ள ஏறத்தாழ 90 சதவீதமான அனைத்து தொழில்முயற்சிகளில் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவுத் தொழில்முயற்சிகளை கொண்டுள்ளன என சர்வதேச தொழிலாளர் அமைப்பு அறிக்கையிட்டுள்ளது. விவசாயம் அல்லாத பொருளாதார நடவடிக்கைகள் தொடர்பில் 2013/14 இல் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத்திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட பொருளாதார தொகைமதிப்பின் படி, இலங்கையின் விவசாயம் அல்லாத தொழில்முயற்ச்சிகளின் ஏறத்தாழ[1] 99 சதவீதமானவை நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவுத் தொழில்முயற்சிகள் என கண்டறியப்பட்டன. அதே வேளை நாட்டில் 45 சதவீதமான வேலைவாய்ப்பானது நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவுத் தொழில்முயற்சிகள் துறையில் உள்ளது என கைத்தொழில், வாணிப அலுவல்கள் அமைச்சு மதிப்பிட்டது.

இலங்கையில் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவுத் தொழில்முயற்சிகளின் வளர்ச்சிக்கு நிதிக்கான மட்டுப்படுத்தப்பட்ட அணுகலே ஒரு முக்கிய தடையாகயுள்ளது எனகுறிப்பிடப்படுகின்றது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் படி, இலங்கையில் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவுத் தொழில்முயற்சிகளின் கொடுகடனை பெற்றுக்கொள்ளும் தடங்களல்களுக்கு பங்களிக்கும் முக்கிய காரணிகள் அ) இடர்நேர்வுகளுக்கு எதிரான வங்கித்தொழில் கலாசாரம் மற்றும் பிணையங்கள் மீது அதிகம் சார்ந்திருப்பது, ஆ) தகவல்களுக்கிடையிலான சமச்சீரின்மையை தீர்ப்பதற்கான இயக்கமுறைகளின் போதாமை உள்ளடங்கலான சந்தைக்கட்டமைப்பிலுள்ள வரையறைகள், மற்றும் இ) நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவுத் தொழில்முயற்சிகளுக்குள் காணப்படும் வரையறைகள் உதாரணமாக குறைவான நிதியியல் கல்வியறிவு, சந்தையறிவின்மை, வெளிப்படைத்தன்மையில்லாமை போன்றவையே காரணங்களாகும்.[2] இவ்வகையில் வழங்கப்பட்ட கொடுகடனின் தொகை மற்றும் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவுத் தொழில்முயற்சித் துறைகளுக்கான கடன்கள் மீது அறவிடப்படும் வட்டி வீதம் என்பவையை ஆராய்வதற்கு தகவல்களின் கிரமமான கிடைக்குந்தன்மை இல்லாமை என்பது செயற்றிறனான கொள்கைபகுப்பாய்விற்கு தடங்கலாகவுள்ளது. சிறிய மற்றும் நடுத்தரளவுத் தொழில்முயற்சிகள் இந்த உலகளாவிய கொவிட்-19 நோய்ப்பரம்பலினால் பாதிக்கப்பட்டதுடன், இதற்கு மத்தியில் ஓர் தகவல் வெற்றிடம் வலுவாக உணரப்பட்டது. அத்தைகய தகவல்களின் முக்கியத்துவத்தை கருத்திற்கொண்டு 2020 ஜூலையில் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவுத் தொழில்முயற்சிகளுக்கு வழங்கப்பட்ட கொடுகடன் தொடர்பில் இலங்கை மத்திய வங்கியானது மாதாந்த அளவீட்டினை தொடங்கியது. ‘சிறிய மற்றும் நடுத்தரளவுத் தொழில்முயற்சிகளுக்கான கொடுகடன் அளவீட்டின்’ முக்கிய நோக்கமானது, உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளினால் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவுத் தொழில்முயற்சிகளுக்கு[3] வழங்கப்பட்ட கொடுகடனின் சராசரி செலவினத்தை இனங்காண்பதாகும். இந்த நோக்கத்திற்காக, சராசரி நிறையேற்றப்பட்ட வட்டி வீதத்தை அடைவதற்கு ஒத்த கடன் அளவுகளும் திரட்டப்பட்டன.

1 (2015) தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தின் அறிக்கையைப் பார்க்கவும்


2 (2017) ஆசிய அபிவிருத்தி வங்கியின் அறிக்கையைப் பாரக்கவும்

3 நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவுத் தொழில்முயற்சிகள் வரையறுக்கப்படும் முறைகளானது நாட்டிற்கு நாடு வேறுபடுகின்றன. இலங்கையைப் பொருத்தவரையில், பல்வேறு முகவர்கள் தமது குறிக்கோள்களை அடிப்படையில் பல்வேறு வரையறைகளை பயன்படுத்துகின்றனர் (2014 - தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தின் அறிக்கை). நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவுத் தொழில்முயற்சிகளின் கொடுகடன் கணக்கெடுப்பின் நோக்கத்திற்காக, இலங்கை மத்தியவங்கியின் அண்மைக்கால பணிப்புரைகளின் கீழ் விடுக்கப்பட்ட வழிகாட்டிகளுடன் இணைந்து சீராக காணப்படுவதற்காக ஆண்டு வருமானம் ரூ 1 பில்லியனுக்கும் விஞ்சாத நிறுவனங்களை பரிசீலிக்கவும், 300 க்கும் குறைவான ஊழியர்களைப் பணியமர்த்தவும் வங்கிகள் கோரப்படுகின்றன.


வரைபடம் சி.கு. 6.1

**உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவுத் தொழில்முயற்சிகளுக்கு வழங்கப்பட்ட கடன்கள் மீதான சராசரி வட்டி வீதம்**

**உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவுத் தொழில்முயற்சியின் இருப்பு மீதான சராசரி வட்டி வீதம்**





**உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவுத் தொழில்முயற்சிகளுக்கு வழங்கப்பட்ட புதிய கடன்கள் மீதான சராசரி வட்டி வீதம்**




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

வரைபடம் சி.கு. 6.2
**உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளினால் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவுத் தொழில்முயற்சிகளுக்கு வழங்கப்பட்ட கடன்கள் மீதான சராசரி வட்டி வீதம**




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

### சிறிய மற்றும் நடுத்தரளவுத் தொழில்முயற்சிகளுக்கான கொடுகடன் கணக்கெடுப்பின் கண்டுபிடிப்புகள்


அளவீடு தரவுகளின் பூர்வாங்க மதிப்பீடின்படி, சராசரி நிறையேற்றப்பட்ட கடன் வழங்கல் வீதம் மற்றும் சராசரி நிறையேற்றப்பட்ட புதிய கடன் வழங்கல் வீதம் என்பவையினால் அளவிடப்படும் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளால் வழங்கப்பட்ட சிறிய மற்றும் நடுத்தரளவுத் தொழில்முயற்சிகளுக்கான கொடுகடனின் சராசரி வட்டிவீதம் மற்றும் அனைத்துத் துறைகளுக்கும் வழங்கப்பட்ட கொடுகடனின் சந்தை கடன் வழங்கல் வீதத்திற்கும் இடையிலான வேறுபாட்டைக் ஒப்பீட்டளவில் சிறிதாகக் காணப்பட்டது.

போதுமான உயர் கொடுகடன் புள்ளிகள் மற்றும் போதுமான பிணையுறுதியின் பலங்களுடனான ஒப்பீட்டளவில் பெரிய நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவுத் தொழில்முயற்சிகள் போன்றவைக்கு வழங்கப்படும் ருெமளவிலான கொடுகடன்கள் நீங்கலாக வட்டி வீதங்களை ஆராயும்போது நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவுத் தொழில்முயற்சிகளுக்கான கடன்வழங்கல் வட்டி வீதம் மற்றும் ஒட்டுமொத்த வட்டி வீதங்கள் என்பவைக்கிடையிலான இடைவெளி பாரியளவில் காணப்பட்டது.

தளர்ச்சியான நாணய நிலைமைகளினால் அண்மையில் ஏற்பட்ட ஒட்டு மொத்த சந்தை வட்டி வீத வீழ்ச்சி என்பது நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவுத் தொழில்முயற்சிகளின் சராசரி கடன்வழங்கல் வீததிலும் அவதானிக்கப்பட்டது.

அளவீட்டின்படி, உரிமம்பெற்ற வங்கிகளினாலான நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவுத் தொழில்முயற்சிகளின் கொடுகடனின் நிலுவையான இருப்பின் நிறையேற்றப்பட்ட சராசரி வட்டி வீதமான சராசரி நிறையேற்றப்பட்ட சிறிய மற்றும் நடுத்தரளவுத் தொழில்முயற்சிகளிற்கான கடன் வழங்கல் வீதம் என்பது 2020 இறுதியில் 10.95 சதவீதமாக பதிவுசெய்யப்பட்டது. இத்துடன், உரிமம்பெற்ற வங்கிகளினாலான நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவுத் தொழில்முயற்சிகளின் புதிய கடன்வழங்கல் வட்டி வீதமான சராசரி நிறையேற்றப்பட்ட சிறிய மற்றும் நடுத்தரளவுத் தொழில்முயற்சிகளிற்கான புதிய கடன் வழங்கல் வீதம் என்பது 2020 இறுதியில் 8.53 சதவீதமாக 2020 திசெம்பரில் பதிவுசெய்யப்பட்டது.உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுடன் ஒப்பிடும் போது பொதுவாக சிறிய கடன்களை வழங்குகின்ற உரிமம் பெற்ற சிறப்பியல்புவாய்ந்து வங்கிகளால் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவுத் தொழில்முயற்சிகளுக்கு வழங்கப்படும் சராசரி கடன்வழங்கல் வீதமானது, உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளை விட அதிகமாக கண்டறியப்பட்டதுடன், அனைத்து உரிமம் பெற்ற வங்கிகளின் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவுத் தொழில்முயற்சிகளின் சராசரி வீதமானது ஒட்டுமொத்த சந்தையின் கடன்வழங்கல் வீதத்தை விட அதிகமாகக் காணப்பட்டது.


வரைபடம் சி.கு. 6.3
**துறைகளினால் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவுத் தொழில் முயற்சிகளுக்கு வழங்கப்பட்ட கடன்கள் மீதான சராசரி வட்டி வீதங்கள்**




*குறிப்பு:* தடித்த கோடுகள் புதிய கடன்கள் மீதான சராசரி வட்டி வீதங்களைபிரதிபலிப்பதுடன் வெளிநின்ற இருப்புக் கடன்கள் மீதான சராசரி வட்டி வீதங்கள் முறிவுக்கோடுகளை பிரதிபலலிக்கின்றன.

*மூலம்:* இலங்கை மத்திய வங்கி


வரைபடம் சி.கு. 6.4
**2020ஆம் ஆண்டின் இறுதியில் நுண்பாக சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கான வெளிநின்ற கடன்களின் துறைசார் விநியோகம**




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

வரைபடம் சி.கு. 6.5

**2020ஆம் ஆண்டின் இறுதியில் நுண்பாக சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கான வெளிநின்ற கடன்களின் அளவு சார் விநியோகம்**




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

2020இன் இறுதியில் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவுத் தொழில்முயற்சிகளுக்கு வழங்கப்பட்ட கடனின் நிலுவையில் உரிமம் பெற்ற வர்த்தக வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களின் பங்கு 90.2 சதவீதமாகும். அதே வேளையில் வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கையின் நியதிகளில், 2020இன் இறுதியில் உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் பங்கு 50.2 சதவீதமாகும்.

விவசாயத்துறையில் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவுத் தொழில்முயற்சிகளுக்கு உரிமம் பெற்ற வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களின் சராசரி வட்டிவீதமானது கைத்தொழில் மற்றும் சேவைத்துறைகளுக்கு வழங்கப்பட்ட கடன்களை விட அதிகமாகக் காணப்பட்டன. மேலும் கடனின் அளவு என்ற நியதிகளில் கடன்களின் பகிர்மானத்தின்படி, பெரிய கடன்களின் சராசரி வட்டி வீதமானது சிறிய கடன்களை விட குறைவாக இருந்தன. எனினும் இந்த அளவீட்டின் ஆரம்பத்திலிருந்து நடுத்தர அளவிலான கடன்களுடன் ஒப்பிடும் போது சிறிய கடன்களும் ஒப்பீட்டளவில் குறைவான வீதத்தில் ஈர்க்கப்பட்டன.

2020 இன் இறுதியில் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவுத் தொழில்முயற்சிகளுக்கு வழங்கப்பட்ட கடன்களின் நிலுவையானது ரூ 743.0 பில்லியனாகக்[4] காணப்பட்டதுடன் இது உரிமம் பெற்ற வங்கிகளால்[5] தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கடன்களின் 11.1 சதவீதமாகும். தொகை மற்றும் கடன்களின் எண்ணிக்கை என்ற நியதிகளில் நிலுவையில் உள்ள கடன்கள் மற்றும் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவுத் தொழில்முயற்சிகளுக்கான புதிய கடன்கள் என்பவையின் பெரும் பகுதியானவைக்கு கைத்தொழில் துறை வகைகூறியது. அளவு மற்றும் கடன்களின் எண்ணிக்கை என்ற நியதிகளில், நிலுவை மீதி மற்றும் புதிய வழங்கல்களில் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவுத் தொழில்முயற்சிகளுக்கான கடன்களின் மிகச் சிறிய பங்கிற்கு வேளாண் துறை வகைகூறியது.

அண்மை மாதங்களில் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவுத் தொழில்முயற்சிகளுக்கு வழங்கப்பட்ட புதிய கடன்வழங்கல்களின் பெருமளவானவை குறுங்காலத் தன்மையுடைனவாகக் காணப்பட்டதுடன், முதிர்ச்சி அமைப்பின் நியதிகளில் கடன்வழங்கலின் இருப்பென்பது பெருமளவிற்கு சமநிலையுடையதாகயிருந்தது.[6]

4 செயல்படாத கடன்கள், ஐந்தொகையில் அல்லாத விடயங்கள் தவிர்ந்த உரிமம் பெற்ற வங்கிளால் வழங்கப்பட்ட ரூபாய் கடன்கள் மற்றும் அரசாங்கம் மற்றும் இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட மறுநிதியளிப்பின் திட்டங்களின் ஊடாக வழங்கப்பட்ட தொகைகள்

5 உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள்(நாணயக் கணக்கெடுப்பில் அளவிட்டதன் படி-ஆ2) மற்றும் உரிமம் பெற்ற சிறப்பு வங்கிகளினால் (நாணயக் கணக்கெடுப்பில் அளவிட்டதன் படி- ஆ4) தனியார் துறைக்கு இலங்கை ரூபாயில் வழங்கப்பட்ட மொத்த இருப்பு கொடுகடன்.

6 ஒரு வருடம் அல்லது அதற்கு உட்பட்ட காலங்கள் குறுங்கால கடன்கள் என்றும், ஒரு வருடத்திலிருந்து ஐந்து வருடத்திற்குட்பட்ட கடன்கள் இடைத்தர கால கடன்கள் என்றும் ஐந்துவருடத்திற்கு மேற்பட்ட கடன்கள் நீண்ட கால கடன்கள் என்றும் பிரிக்கப்பட்டன.

கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் மத்தியில் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவுத் தொழில்முயற்சியால் முகங்கொடுக்கப்பட் காசுப்பாய்ச்சல் தொடர்பான குழப்பங்கள் தடைகளின் காரணமாக இவை இடம்பெற்றிருக்கலாம். இந்த அளவீட்டின் முடிவுகள் என்பன வணிக மாதிரிகளின் வேறுபாடுகளை பிரதிபலித்து வங்கிகளின் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவுத் தொழில்முயற்சியின் வெளிப்படுத்துகையை வெளிப்படுத்தின.

**பிராந்திய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையின் நுண்பாக சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளின் நிதியிடுதல்**

நுண்பாக சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளின் வரைவிலக்கணங்களிலுள்ள வேறுபாடுகள் மற்றும் அந்தந்த பொருளாதாரங்களில் நுண்பாக சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சித் துறைகளின் முக்கியத்தும் என்பவையின் ஒப்பீட்டளவிலான முக்கியத்துவத்தில் காணப்படும் வேறுபாடுகளினால் நுண்பாக சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளின கடன்வழங்கல் நாடுகளுக்கிடையிலான ஒப்பீடானது சவாலானதாக அமையக்கூடும்.

இருப்பினும், அண்மைக் காலங்களில் இலங்கையின் பொருளாதார முன்னேற்றத்தை விஞ்சிய கொரிய குடியரசு, மலேசியா மற்றும் தாய்லாந்து போன்ற பிராந்திய நாடுகளுடன் பரந்தளவிலான ஒப்பீட்டை மேற்கொள்ளும்போது முறையான வங்கித்தொழில் துறையினால் இலங்கையின் நுண்பாக சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சித் துறைகளுக்கான கடன்வழங்கலானது, ஒப்பீட்டளவில் நலிவாகவுள்ளது. இருக்கின்றது. இலங்கையிலுள்ள நுண்பாக சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சித் துறைகளுக்கான கொடுகடன் பங்கு தாழ்வாக[7] இருக்கின்ற அதேவேளை, நுண்பாக சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கு வழங்கப்பட்ட கடன்கள் குறிப்பாக சிறயளவிலான கடன்கள் மற்றும் முதன்மை வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்ட கடன்கள் மீதான சராசரி வட்டிவீதங்களுக்கிடையிலான வேறுபாடு அதிகாமாகவுள்ளது. நிதியியல் சந்தை அபிவிருத்தி மட்டம், நுண்பாக சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளின் மோசமான நிதியியல் அறிவு மற்றும் வங்கித் தொழில்துறை நடவடிக்கைகளில் அவர்களின் அணுகுமுறை போன்ற பல பங்களிப்பு காரணிகளினை ஒப்பீட்டளவில் உயர்வான வட்டி வீத வேறுபாடுகளை பிரதிபலிக்கலாம்.

நுண்பாக சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளினை மேம்படுத்துவதன் முக்கியத்துவத்தினை கொரிய குடியரசு கண்ட வெற்றி அனுபவத்தில் அவதானிக்கலாம். சேம்சங், எல்.ஜி, ஹுண்டாய் போன்ற உலகின் பாரிய நிறுவனங்கள் இருந்தபோதிலும் நுண்பாக சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளின் தயாரிப்புக்களின் பெறுமதி சேர்க்கப்பட்ட பங்கானது 2014இல் 49 சதவீதத்திற்கும்[8] மேலாகக் காணப்பட்டது.

7 சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளின் கணக்கெடுப்பின்படி, உரிமம்பெற்ற வங்கிகளின் மூலம் வழங்கப்பட்ட கொடுகடன் மாத்திரம் கவனத்திற்கொள்ளப்படும்.

8 ஜோன்ஸ் மற்றும் லீ இனை பார்க்க (2018)

அட்டவணை: சி.கு.1

**தெரிவுசெய்யப்பட்ட நாடுகளில் நுண்பாக சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சித் துறைக்கு நிதியிடல்**

| நாடு | மொத்த வெளிநின்ற தொழில் கடன்களின் பங்காக நு.சி.ந.தொ இற்கு வெளிநின்ற கடன்கள் (இறுதி 2017,[9] %) | பாரிய நிறுவனங்கள் மற்றும் நு.சி.ந.தொ களுக்கு கடன்களுக்கு இடையே வட்டி விகிதம் பரவுகிறது (இறுதி 2017,[9] அ.பு) |
|---|---|---|
| கொரிய குடியரசு | 80.2 | 31 |
| மலேசியா | 50.6 | 217 |
| தாய்லாந்து | 50.5 | வி.கி. |
| இந்தோனேசியா | 19.9 | 167 |
| இலங்கை | 14.1[10] | 246[11] |

*மூலம்:* பொ.கூ.ஒ.ஒ OECD (2019), இலங்கை மத்திய வங்கி

### முன்னோக்கிப் பயணித்தல்

நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சித் துறைகளின் வலுப்படுத்தலுக்கான வங்கி கடன்வழங்கல் மீதான புதிய அளவீடென்பது தரவுகளுடன் இலங்கையிலுள்ள நுண்பாக சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சித் துறைகளில் குறைந்த செலவிலான நிதியிடலுக்கான மட்டுப்படுத்தப்பட்ட நுழைவினை வலியுறுத்துகிறது. கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் பரவலின் மத்தியில் வழங்கிய ஆதரவு போன்ற அண்மைக்கால கொள்கை வழிமுறைகளுடன் இலங்கை கொடுகடன் தகவல் பணியகததின் கொடுகடன் புள்ளியிடுதலின் அறிமுகம், அதிகாரச் சபையின் வலுப்படுத்தல் - போன்ற முன்முயற்சிகள் மூலமாக கொழும்பு பங்கு பரிவர்த்தனை ஊடாக பங்கு மூலதனத்தை அடைவதற்கு நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளை ஊக்குவித்தல் ஊக்குவித்தல், முன்னுரிமை துறை கடன்வழங்கல் இலக்குகளை நடைமுறைப்படுத்தல் என்பன தற்போதைய பொருளாதார சவால்களை எதிர்கொள்வதற்கும் நடுத்தரத்திலிருந்து நீண்டகாலத்திற்கு மேலான வளர்ச்சி திறனை அடைவதற்கும் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கு உதவுக்கூடும். பரந்த கொடுகடன் உத்தரவாதத் திட்டங்களை அறிமுகப்படுத்தல் அல்லது நிரந்தர கொடுகடன் உத்தரவாத நிறுவனத்தினை தாபித்தல் போன்ற வழிமுறைகள், நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கு நிதியின் அணுகலை மேம்படுத்துவதற்கு உதவலாம். இது இந்தத் துறையில் ஏற்றுக்கொள்ளக்கூடிய பிணையமின்மை குறித்த நீண்ட காலப்பிரச்சினையை தீர்க்கும்.

9 பொ.கூ.ஒ.ஒ (2019) ஆனது, 2007-17 காலத்திற்கான தகவலை உள்ளடக்குகின்றது

10 நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சித்துறைகளின் கொடுகடன் கணக்கெடுப்பில் அளவிடப்பட்ட உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் பெறப்பட்ட நு.சி.ந.தொ களுக்கான கடன்களின் இருப்பானது, வேளாண்மை, கைத்தொழில் மற்றும் பணித் துறைகளுக்கான மொத்த கடனின் ஒரு பங்காக, 2020ஆம் ஆண்டின் இறுதிக்குள் வர்த்தக வங்கிகளின் கடன்கள் மற்றும் தனியார் துறைக்கான முற்பணங்களின் காலாண்டு கணக்கெடுப்பில் அளவிடப்படுகின்றது.

11 பாரிய நிறுவனங்களுக்கான தொடர்புடைய வட்டி வீதம் தற்போது கிடைக்கவில்லை என்பதால், உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் 2020 திசெம்பர் காலப்பகுதியில் சராசரி நிறையேற்றப்பட்ட புதிய கடன்வழங்கல் வீதம் மற்றும் அதனுடன் தொடர்புடைய மாதத்திற்கான சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மைக் கடன்வழங்கல் வீதத்திற்கிடையிலான பரவலானது இங்கு கவனம்செலுத்தப்படுகின்றது.

**உசாத்துணை:**


- Asian Development Bank, 2017, Small and Medium-sized Enterprises Line of Credit Project - Additional Financing: Report and Recommendation of the President, viewed on 27 January 2021, <https://www.adb.org/projects/documents/sri-49273-002-rrp>.
- Department of Census and Statistics, 2015, Non-Agricultural Economic Activities in Sri Lanka, Economic Census 2013/2014 - Listing Phase, viewed on 27 January 2021, <http://www.statistics.gov.lk/Economic/Non%20agri.pdf>.
- International Labour Organization, 2019, The power of small: Unlocking the potential of SMEs, viewed on 22 March 2021, <https://www.ilo.org/infostories/en-GB/Stories/Employment/SMEs>.
- Jones, R.S. and Lee, J.W., 2018, Enhancing Dynamism in SMEs and Entrepreneurship in Korea, Economics Department Working Papers No. 1510, OECD, < www.oecd.org/eco/workingpapers>.
- Ministry of Industry and Commerce, 2016, National Policy Framework for Small and Medium Enterprises (SMEs) Development - Action Plan, viewed on 21 March 2021, <http://www.industry.gov.lk/web/images/pdf/gg.pdf>.
- OECD, 2019, Financing SMEs and Entrepreneurs 2019: An OECD Scoreboard, OECD Publishing, Paris. <https://doi.org/10.1787/fin_sme_ent-2019-en>.


7